வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 07  08.04.2026 புதன்கிழமை  இதழ் : 92  பக்கங்கள் : 08


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## மின்சார நுகர்வோரின் மீது சுமையை திணிக்காது அரசு!

### 10000 கோடி ரூபா நிவாரணப் பொதியை சபையில் நேற்று அறிவித்தார் ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 08

நாட்டில் தற்போது நிலவும் கடும் வறண்ட காலநிலை மற்றும் நீர்மின் உற்பத்தி நிலையங்களின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், மின் நுகர்வோர் மீது சுமையைத் திணிக்காது அவர்களுக்கு அதிகபட்ச நிவாரணங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய,10000 கோடி ரூபாய் பெறுமதியான பாரிய நிவாரணப் பொதியொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத் திருத்தம் குறித்து நேற்று பாராளுமன்றில் நிகழ்த்திய உரையில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க,குறைந்த அலகுகளைப் பயன்படுத்தும் சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள் ளதாகத் தெரிவித்தார்.

குறைந்த அலகுகளைப் பயன்படுத்துவோருக்கான மாதந்த

07

## விவசாயிகளின் உர மானியம் 30 ஆயிரம் ரூபாவாக உயர்வு!

கொழும்பு, ஏப். 08

விவசாயிகளுக்கான விசேட நிவாரணத் திட்டத்தின் கீழ், நெற்பயிர் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உர மானியத்தை கணிசமாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானி த்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில்

07

## மருதனார்மடம் தோட்ட கிணற்றில் மானிப்பாய் வாசியின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ்ப்பாணத்தில் தோட்ட கிணற்றில் இருந்து ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியை சேர்ந்த கோபாலபிள்ளை கமலதாஸ் (வயது 39) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மருதனார்மடம் பகுதியில் உள்ள தோட்ட கிணற்றுக்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை அநாதரவான நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று காணப்பட்டுள்ளது.

அதனை அடுத்து தோட்ட உரிமையாளர் அப் பகுதியில் தேடுதல் நடத்தியவேளை கிணற்றுக்

07

## செம்மணி புதைகுழி 3ஆம் கட்ட அகழ்வுக்கு நீதி அமைச்சின் அனுமதி இன்னும் இல்லை!



யாழ்ப்பாணம், ஏப். 08

செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்கான செலவீன பாதீட்டுக்கு நீதி அமைச்சு இன்று வரை அனுமதி வழங்காதமை தொடர்பில் யாழ் . நீதவான் நீதிமன் றுக்கு சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தெரியப் படுத்தியுள்ளார்.

செம்மணி புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை முன் னெடுப்பது தொடர் பான வழக்கு விசாரணைகள் நேற்று செவ்வாய்

07

## அஸ்வெசும அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 08

குறைந்த வருமானம் பெறும் அஸ்வெசும பயனாளர்களுக்கான 17,500 கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அஸ்வெசும கொடுப்பனவு 17,500 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரையும், 10,000 ரூபாய் கொடுப்பனவு 15,000 ரூபாய் வரையிலும் அதிகரிக் கப்பட்டுள்ளது.

07

## ஏப்ரல் மாத நடுப்பகுதியிலிருந்து இலங்கைக்கு ரஷ்ய எரிபொருள்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 08

ஏப்ரல் நடுப்பகுதியில் இருந்து இலங்கைக்கு எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு ரஷ்யாவுடன் அரசியல் ரீதியான உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ராஸ் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

எரிபொருள் விநியோகம்

07

## செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 08

செம்மணி புதைகுழி காணப்படும் பகுதியை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் பார்வையிட யாழ்.நீதவான் நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

செம்மணி புதைகுழிப் பகுதியை நேரில் பார்வையிட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்திருந்தனர்.

அது குறித்து நேற்று நடைபெற்ற செம்மணி புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணையின் போது ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் புதைகுழி பகுதியை பார்வையிட மன்று அனுமதித்துள்ளது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 09.30 மணிக்கு முன்னராக

07

## எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அரசால் எரிபொருள் நிவாரணம்!

### சபையில் அறிவித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 08

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 3 மாதங்களுக்கு எரிபொருள் நிவாரணத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல், அமெரிக்கா - ஈரான் போர்ச் சூழலால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலையை யடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள்

07

## பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் வைத்து அறுத்த தாலி கிளிநொச்சி ஆலயத்தில் மீட்பு!

### மறைத்து வைத்த பெண் பொலிஸாரால் கைது



யாழ்ப்பாணம், ஏப். 08

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் அறுத்த தாலிக்கொடியை கிளிநொச்சியில் உள்ள ஆலயம் ஒன்றின் பிள்ளையார் சிலைக்கு பின்புறமாக இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற பங்குனி திங்கள் உற்சவத்தின்போது பக்தர்கள்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்தியை முன்னிறுத்தி விசேட மாநாடு ஒன்றை நடத்த திட்டம்

## யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மாகாண ஆளுநருக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 08

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை முன்னிறுத்தி, கொழும்பில் உள்ள நிதியளிக்கும் நிறுவனங்கள், தூதரகங்கள் மற்றும் பல்வகை அமைப்புக்களின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து விசேட மாநாடொன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.



யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாகத்தினருக்கும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாடு, சமூகப் பிரச்னைகளுக்கான தீர்வுகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் எதிர்காலச் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

மாகாணத்தின் அபிவிருத்தியை முன்னிறுத்தி, கொழும்பில் உள்ள நிதியளிக்கும் நிறுவனங்கள், தூதரகங்கள் மற்றும் பல்வகை அமைப்புக்களின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து விசேட மாநாடொன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக இணையப் பிரதிநிதிகள் இதன்போது ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். வளைகுடாப் பகுதியில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக இம்மாநாடு சற்றுத் தாமதமாகியபோதிலும், நிலைமைகள் சீரடைந்ததும் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்குமான நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இம்மாநாட்டை நடத்துவதற்கு ஆளுநரின் ஆலோசனையும் வழிகாட்டலும் கோரப்பட்டது.

மேலும், வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களின் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையங்களையும் ஒருங்கிணைத்து "வடக்கு மாகாண அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம்" ஒன்றை உருவாக்குவதற்கான கோரிக்கையும் இதன்போது முன்வைக்கப்பட்டது. இதற்காக மாவட்ட செயலாளர்கள் ஊடாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 5 பிரதிநிதிகளை அழைத்து ஆளுநர் செயலகத்தில் கூட்டமொன்றை நடத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன், அரச திணைக்களங்களில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் சிவில் சமூகத்தின் குரலைப் பிரதிபலிக்கும் வகையில், சமூகப் பிரதிநிதிகளாக இணையத்தின் உறுப்பினர்களுக்கும் உரிய சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மாகாண இளைஞர்களுக்கான தொழில்வாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் அவர்களை வலுவூட்டுவது தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இணையப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்திய ஆளுநர், பொதுமக்களின் நலன் கருதி மாகாண நிர்வாகத்தால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். அத்துடன், மாகாணத்தின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக சிவில் சமூக அமைப்புக்களுடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவதற்கான முழுமையான வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இ.போ.ச. பஸ் சாரதி, நடத்துநருடன் முரண்பட்ட தனியார் பஸ் உரிமையாளருக்குப் பணித்தடை!

யாழ்ப்பாணம், ஏப். 08

காரைநகர் மார்க்கத்தில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதி மற்றும் நடத்துநருடன் பாரதூரமான முரண்பாட்டில் ஈடுபட்ட தனியார் பஸ் உரிமையாளர் ஒருவருக்கு ஒரு மாத காலப் பணித்தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 02.04.2026 அன்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பான விசேட விசாரணைகள் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த விசாரணையின்போது, தனியார் பஸ் உரிமையாளர் இ.போ.ச. ஊழியர்களுடன் முரண்பட்ட குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டுள்ளார். இதனடிப்படையில், அவர் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் வழியனுமதிப் பத்திரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு பஸ்ஸிலும் பணியாற்றுவதற்கு, நேற்று முன் தினம் தொடக்கம் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி வரையான ஒரு மாத காலத்துக்கு முழுமையான பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தின் போது பயணிகள் சேவையில் ஈடுபடும் தரப்பினரிடையே ஏற்படும் இவ்வாறான ஒழுக்க மீறல்கள், வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் செயற்பாடுகள், மேலதிக கட்டணம் அறவிடப்படுதல் அல்லது பயணிகள் வேறு ஏதேனும் அசௌகரியங்களை எதிர்கொண்டால், எவ்வித தயக்கமுமின்றித் தகுந்த ஆதாரங்களுடன் (பயணச்சீட்டு, ஒளிப்படங்கள் அல்லது காணொலிகள்) அதிகார சபைக்கு உடனடியாக முறைப்பாடு செய்யுமாறு தலைவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான முறைப்பாடுகளை 071 9090900 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்குப் பொதுமக்கள் உடனடியாகத் தெரியப்படுத்த முடியும் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது. (அ)

# மக்களுக்கு நெருக்கடி வழங்குகின்றது அரசு!

## பத்தரமுல்ல சீலரத்ன தேரர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 08

தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தாலும், இப்போது மக்களை மேலும் சிரமத்திற்கு உள்ளாக்குவதாக ஜனசெத பெரமுனவின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை சுமார் 3,990 ரூபாயிலிருந்து 4,775 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் சுமார் 775 ரூபாயால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தாலும், இப்போது மக்களை மேலும் சிரமத்திற்கு உள்ளாக்குகிறது. மக்களுக்கு காஸ் காட்டுவதாகக் கூறிவிட்டு, இப்போது அரசாங்கம் தனது ஆட்டத்தைக் காட்டுகிறது. எரிவாயுவைத் தொடர்ந்து டீசல், நீர் மற்றும் உரம் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் வரும் நாட்களில் அதிகரிக்கக் கூடும். அதிக வரிச் சுமை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக சாதாரண மக்கள், அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பினரும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்-என்றார். (அ)

# சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு; பாவனையாளர் முன்னணி கண்டனம்

கொழும்பு, ஏப். 08

நாட்டில் சமையல் எரிவாயு விலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக இலங்கை பாவனையாளர் முன்னணி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் மீண்டும் பழைய சமையல் முறைகளுக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பாவனையாளர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத், எரிவாயு விலை உயர்வால் நடுத்தர வர்க்க மக்களும் இல்லத்தரசிகளும் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

எரிவாயுவைப் பயன்படுத்த முடியாத நிலை உருவாகி வருவதால், மக்கள் மீண்டும் விறகு அடுப்பு மற்றும் சிரட்டை அடுப்புகளை பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், சிரட்டைகளை பயன்படுத்தி அடுப்புகளை உருவாக்கும் முறைகள் குறித்து மக்களுக்குத் தாமே வழிகாட்டத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விலை உயர்வு உணவகத் துறையையும் பாதித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், கொத்து, பிரைட் ரைஸ் உள்ளிட்ட உணவுகளின் விலைகள் உயர்த்தப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது-என்றார். (அ)

# விசேட வைத்திய நிபுணர்களுக்கான பதவிகள் வைத்தியசாலைகளில் இரத்து

## அரச வைத்தியர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 08

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள அரச வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணர்களுக்கான பதவிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சஞ்சீவ தென்னக்கோன், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட அலகு என்பன இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், ராகம போதனா வைத்தியசாலையின் கல்லீரல் சிகிச்சை நிலையம் மற்றும் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றின் விசேட வைத்திய நிபுணர் பதவிகள் நீக்கப்பட்டுள்ளதாகவும், வவுனியா பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அரசியல் தலையீடுகள் காணப்படுவதாகவும் அவர் சாடினார்.

நாட்டில் சுமார் 3,000 விசேட வைத்திய நிபுணர்கள் தேவைப்படும் நிலையில், தற்போது 2,100 பேர் மாத்திரமே பணியில் உள்ளதாகவும், இத்தகைய நடவடிக்கைகள் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதை அதிகப்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார்.

இக்குற்றச்சாட்டுகள் குறித்துப் பதிலளித்துள்ள சுகாதார பிரதி அமைச்சர் கலாநிதி ஹன்சக விஜேமுனி, இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்ட சுமார் 7,000 வைத்தியர்களில் பெரும்பான்மையானோர் இடமாற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். (அ)

# புதிய வீடு நிர்மாணப் பணிகளின்போது வடிகாலமைப்பு சபை அனுமதி கட்டாயம்

கொழும்பு, ஏப். 08

புதிய வீடமைப்பு நிர்மாணங்களின்போது, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்வதைக் கட்டாயமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மின்சார விநியோக நிறுவனங்களுடன் இணைந்து இதற்கான புதிய சட்ட விதிமுறைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக நீர் வழங்கல் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நடைமுறைப்படி, ஒரு காணியின் எல்லை வரை மாத்திரமே நீர் வழங்கல் சபையினால் நீர் விநியோகிக்கப்படுவதுடன்,வீட்டிற்குள் அமைக்கப்படும் குழாய் கட்டமைப்புகள் குறித்து எவ்வித ஒழுங்குமுறைப்படுத்தல்களும் இல்லை. இதனால் வீடுகளுக்குள் ஏற்படும் நிலத்தடி நீர் கசிவுகள் காரணமாக நுகர்வோர் தேவையற்ற நிதி இழப்புகளைச் சந்திப்பதுடன், நாட்டின் ஒட்டுமொத்த நீர் வளமும் வீணடிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின் கீழ், வீடுகள் கட்டி முடிக்கப்படுவதற்கு முன்னர் நீர் வழங்கல் சபையினால் சான்றளிக்கப்பட்ட விசேட நிபுணர்கள் குழாய் கட்டமைப்புகளைப் பரிசோதித்த பின்னரே அனுமதி வழங்கப்படவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.04.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஜே.வி.பி. தலைவர்களுக்கு முன்னாள் தோழரின் ஆலோசனைகள்

ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) முதலாவது ஆயுதக் கிளர்ச்சியின் 55 ஆவது வருட நிறைவை முன்னிட்டு ஏப்ரில் வீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றன. வவுனியாவில் பிரதான நிகழ்வில் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா பங்கேற்றார்.

வடமாகாணத்தில் அந்த நிகழ்வு நடைபெற்றதால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகள் குறித்து அவர் பிரத்தியேகமாக எதையாவது குறிப்பிடுவார் என்ற எதிர்பார்ப்பு பொதுவாக இருந்திருக்கும். ஆனால், அவர் அவ்வாறு எதையும் கூறியதாக செய்திகள் வரவில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக முழு நாடும் ஒன்றிணைந்து அமைத்த அரசாங்கம் என்பதால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விசேட பலத்தைக் கொண்டதாக இருக்கிறது. பழைய முறைமைகளை மாற்றுவதற்காகவே இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டது. அந்த மாற்றங்களை இலகுவாகச் செய்ய முடியாது. கால அவகாசம் தேவைப்படுகிறது என்று தனதுரையில் கூறிய ரில்வின் சில்வா சவால்களுக்கு முகங்கொடுக்கும் வல்லமை தேசிய மக்கள் சக்தியிடம் இருப்பதால் வெறுமனே குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தை வீழ்த்தலாம் என்று எவரும் நினைக்கக் கூடாது என்று எச்சரிக்கையும் செய்தார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஜே.வி.பி.யின் முன்னாள் பொதுச் செயலாளர் லயனல் போபகே தங்களது முதலாவது ஆயுதக் கிளர்ச்சியின் நினைவாக எழுதிய கட்டுரை ஒன்றில் தற்போது ஆட்சியில் இருக்கும் தனது தோழர்களுக்கு கூறியிருக்கும் அறிவுரையை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று ஈழநாடு நம்புகிறது.

“அறகலய போராட்டத்தை தொடர்ந்து தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்தது. நாட்டைப் பாழ்படுத்திய ஊழல்தனமான அதிகார வர்க்கத்தை மக்கள் நிராகரித்தார்கள். ஊழலுக்கு எதிரான மக்களின் ஆணை பிரமாண்டமானது. பதவிக்கு வந்து ஒரு வருடத்துக்கு பிறகு தேசிய மக்கள் சக்திக்கு 65 சதவீதமான மக்களின் ஆதரவு இருப்பதை கருத்துக் கணிப்புகள் காட்டின.

“தேசிய மக்கள் சக்தியிடம் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் இது தெளிவாக வெளிக்காட்டுகிறது. இருந்தாலும், தேசிய இனப்பிரச்னைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இதுவே அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டிய மிகவும் அவசரமான கட்டமைப்பு ரீதியான சவாலாகும்.

“வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இராணுவப் பிரசன்னத்தை தொடர்ந்தும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. நில அபகரிப்பு தொடருகிறது. அரசியல் செயற்பாட்டாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். அரசியலமைப்பு ரீதியாக ஆணை வழங்கப்பட்ட மாகாணசபைகள் செயலிழந்து கிடக்கின்றன.

“மாகாணசபை தேர்தல்கள் தாமதமின்றி நடத்தப்பட வேண்டும். அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பரவாக்கல் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை அடிப்படையில் மறுசீரமைக்க வேண்டும். வரலாற்றுத் தவறுகளுக்கு நேர்மையான முறையில் முகங்கொடுப்பதற்கு வெளிக்காட்டப்பட வேண்டிய தார்மீக அதிகாரத்தை ஒருபோதுமே இனத்துவ அரசியலுக்கான சலுகையாக நோக்கக்கூடாது. ஜே.வி.பி. நாட்டம் கொண்டிருப்பதாகக் கூறும் தேசிய ஐக்கியத்துக்கான அடித்தளம் இதுவேயாகும்.

“பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு பிரமாண்டமான பெரும்பான்மைப் பலம் இருக்கின்ற போதிலும், முக்கியமான அரசியலமைப்பு மாற்றங்கள் எதுவும் இதுவரையில் கொண்டு வரப்படவில்லை. தாமதிக்கப்படுகின்ற ஒவ்வொரு மாதமும் மாற்றத்துக்கான உறுதிமொழிகளை வாபஸ் வாங்கும் காலப் பகுதியாகவே கணக்கில் சேரும்.”

# மத்திய கிழக்கு போர்ச் சூழலால் உலக பொருளாதாரம் மந்தமடையும்

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 08

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக உலகளாவிய பணவீக்கம் அதிகரிப்பதோடு, பொருளாதார வளர்ச்சியும் மந்தமடையும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் சர்வதேச நிதி நிறுவனத்தினால் வெளியிடப்படவுள்ள உலகப் பொருளாதாரக் கணிப்புக்கு முன்னதாக அவர் இந்தக் கருத்துக்களை பகிர்ந்துள்ளார்.

உலகின் எண்ணெய் மற்றும் எரிவாயு தேவையில் ஐந்தில் ஒரு பங்கை கொண்டு செல்லும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மறித்துள்ளதால், உலகளாவிய எரிசக்தி விநியோகத்துக்கு இதுவரை இல்லாத மிக மோசமான இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏப்ரல் 14ஆம் திகதி வெளியிடப்படவுள்ள உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் ஊடாக, சர்வதேச நாணய நிதியம் பல்வேறு பொருளாதார நிலைமைகள் குறித்த கணிப்புகளை முன்வைக்கவுள்ளது.

போரினால் ஏற்பட்ட தாக்கம் மற்றும் கடுமையான நிதி நிபந்தனைகள் காரணமாக, பொருளாதார வளர்ச்சி வேகம் வீழ்ச்சியடையக் கூடும் என்று நிபுணர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தனர்.

போர் ஏற்படாதிருந்தால், பெருந்தொற்றுக்குப் பின்னர் பொருளாதாரம் மீட்சியடைந்து வந்த நிலையில், 2026 ஆம் ஆண்டில் 3.3 சதவீத மற்றும் 2027 ஆம் ஆண்டில் 3.2 சதவீத உலகப் பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்த்ததாக கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மேலும் தெரிவித்தார்.

(எ)

# பொருளாதார நிலையத்தில் விசேட பொலிஸ் நடவடிக்கை

### 80 பேர் அதிரடியாக கைது

மாத்தளை, ஏப். 08

தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்குள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முன்னெடுக்கப்பட்ட இரண்டு மணிநேர விசேட பொலிஸ் தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்தின் பேரில் 80 பேர் கைது செய்யப்பட்டனர்.

தம்புள்ளை மற்றும் அதனைச் சூழவுள்ள பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகளின் பங்களிப்புடன் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் சிலரிடமிருந்து கஞ்சா மற்றும் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் இதன்போது கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, தலைமறைவாக இருந்தவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் விவசாயிகளின் மரக்கறி மூடைகள் திருடப்படுதல், வாகனங்களின் உதிரிப்பாகங்கள் திருடப்படுதல் போன்ற சமூக விரோதச் செயல்கள் அதிகரித்திருந்தமையே இந்த விசேட நடவடிக்கைக்கு காரணம்.

குற்றச் செயல்களை கட்டுப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

(எ)

# சிங்கிமலை காட்டில் சிக்கிய நெதர்லாந்து மாணவி மீட்பு!

ஹற்றன், ஏப். 08

ஹற்றன் சிங்கிமலை வனப் பகுதியின் மலை உச்சியில் வழிதெரியாமல் தவித்துக் கொண்டிருந்த நெதர்லாந்து நாட்டு யுவதி ஒருவரை, ஹற்றன் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் பாதுகாப்பாக மீட்டனர்.

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் பகுதியைச் சேர்ந்த 20 வயது லூனா டீகாட் எனும் இந்த யுவதி ஒரு பல்கலைக் கழக மாணவியாவார்.

அவர் தனது பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஏனைய மாணவர்களுடன் இலங்கைக்கு வருகை தந்து, ருஹுணு பல்கலைக்கழகத்துடன் இணைந்து கல்வி கற்று வருகின்றார்.

இதற்கிடையில், கல்விசார் ஆய்வுப் பணிக்காக தனது நண்பர்கள் சிலருடன் இணைந்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஹற்றன் சிங்கிமலை மலை உச்சியை ஏறுவதற்கு சென்றுள்ளார்.

இதன்படி, நேற்று முன்தினம் காலை மலை உச்சியை பார்வையிடச் செல்வதாக கூறிவிட்டு வனப்பகுதிக்குள் சென்ற அவர், மீண்டும் திரும்புவதற்கான வழியைக் கண்டறிய முடியாமல் காட்டில் சிக்கியுள்ளார்.

பின்னர், அவர் இது குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, ஹற்றன் பொலிஸாருடன் இணைந்து அவரைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஹற்றன் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர், பெரும் முயற்சிக்கு மத்தியில் சிங்கிமலை காடு ஊடாக மலை உச்சிக்குச் சென்றனர்.

அங்கு மலை உச்சியில் உள்ள பாறை ஒன்றின் மீது அமர்ந்திருந்த அந்த யுவதியை அவர்கள் பாதுகாப்பாக மீட்டதுடன், காட்டுக்குள்ளேயே அவருக்கு உணவு மற்றும் பானங்களை வழங்கி ஹற்றன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர்.

(எ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் சீனப் பிரஜை ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 08

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட சுமார் 55 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து ஏயார் ஏசியா நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சீனப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் 28 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது. விமான நிலையத்தின் வருகை முனையத்திலுள்ள, கிரீன் சேனல் ஊடாக சிகரெட்களை கடத்திச் செல்ல முயன்றபோதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடுவதால் வீண்பழிக்கு ஆளாவீர்கள். மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமைத்தேவைப்படும்நாள்.

**இடபம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தாயார் ஆதரித்துப் பேசுவார். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் ஊழியர்கள் உதவுவார்கள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மனநிறைவு பெறும் நாள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்களை சந்திப்பீர்கள். எதிர்மறை எண்ணங்கள் விலகும். மனதிற்கு இதமான செய்திகள் வந்து சேரும். அலுவலகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலைவாங்குவீர்கள். உத்தியோகத்தில்தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்குழப்பம் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விஷயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத்தன்மைதேவைப்படும்.

**தனுசு**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டும்.

**மகரம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்ப கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பாத்திரங்கள் ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவுகிட்டும்.

**மீனம்**
இதுவரை இருந்த கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். புது வாய்ப்புகள் வரும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

# சுப்பர் டீசல் விலை அதிகரித்தது சினோபெக் நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 08
திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 28 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் புதிய விலை 600 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வை சினோபெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை மாற்றம் தொடர்பில் சர்வதேச சந்தை நிலவரங்களும் இறக்குமதி செலவுகளும் அதிகரிக்கும் நிலையில், இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விலை உயர்வு போக்குவரத்து செலவுகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (எ)

# "நல்லூர் மந்திரி மனையை நாம் பாதுகாக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், ஏப். 08
யாழ்ப்பாணத்தின் தொன்மையான வரலாற்று சின்னமான நல்லூர் மந்திரி மனை கண் முன்னே அழிந்து போவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார். இதனை புனரமைப்பது தொடர்பில் நல்லூர் மந்திரிமனையின் நம்பிக்கை பொறுப்பாளர்களும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து இரு வாரங்களுக்குள் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

இன்னும் ஒரு மழை வந்தால் இந்த கட்டடம் முழுமையாக இடிந்துவிடக்கூடிய நிலையில் உள்ளது. பாராமுகமாக இருந்தால் அழிந்து விடும் என்ற தென்னிலங்கை நிகழ்ச்சி நிரலுக்கு துணை போவதாக நாம் இருந்து விடக்கூடாது என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-03)

# மாவாக்கடை முற்றுகை! ஆறு பேர் கைதாகினர்

வவுனியா, ஏப். 08
வவுனியா- குடியிருப்பு பூந்தோட்டம் வீதியில் இயங்கி வந்த மாவா பாக்கு கடை பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு, ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போதைத்தடுப்பு பொலிஸாரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் மாவா என்ற ஒருவகை தடைசெய்யப்பட்ட பாக்கு விற்பனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த பகுதியை முற்றுகையிட்ட பொலிஸார் கடையை நடத்திச்சென்ற ஒருவரை கைது செய்ததுடன், மாவா பாக்கினை கொள்வனவு செய்வதற்காக சென்றிருந்த மேலும் ஐந்து பேரையும் கைது செய்தனர்.

அங்கிருந்து பாக்குகளும் வேறு பொருட்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (எ-10)

# 20 போதைமாத்திரைகளுடன் யாழில் இளைஞன் சிக்கினார்

## வாள் ஒன்றும் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஏப். 08
யாழ்ப்பாணத்தில் வாள் மற்றும் 20 போதைமாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

பாசையூர் பகுதியில் இளைஞன் ஒருவர் போதை மாத்திரைகளுடன் நடமாடுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்தனர்.


கைது செய்யப்பட்ட இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இளைஞனிடம் இருந்து 20 போதை மாத்திரைகள் மற்றும் கூரிய வாள் ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். (எ)

# திருட்டு சம்பங்கள் குறித்து யாழில் நான்கு பேர் கைது!

## பல்வேறு பொருட்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 08
யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் நகைகள், பணம் மற்றும் பொருட்களை திருடிய சம்பவம் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ். நகரில் நவீன சந்தை கட்டடத் தொகுதியில் உள்ள கடையில் திருடப்பட்ட மூன்று இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வலைகளையும் கலட்டி அம்மன் கோவில் பகுதி அருகில் உள்ள வீடுகளில் திருடப்பட்ட மூன்றரை பவுண் தங்க மோதிரம் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பன தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.




குறித்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நான்கு பேரை கைது செய்ததுடன் திருடப்பட்ட பொருட்களையும் மீட்டனர். (எ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 08
தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராண சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 52 நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் செ. த. குமரனின் "சமணரை கழுவேற்றிய படலம் " என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

நாடளாவிய ரீதியில் இவ்வருடம் இதுவரை

# 676 வீதி விபத்துக்களில் 706 பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, ஏப். 08

நாடளாவிய ரீதியில் இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 5 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 676 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 706 பேர் உயிரிழந்தனர் என்று போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது வீதி விபத்துக்கள் ஒரு பேரழிவாக உருவெடுத்துள்ளது. 2024, 2025 ஆம் ஆண்டுகளை விட 2026 ஆம் ஆண்டில் விபத்துக்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளன. அந்தவகையில் கடந்த ஆண்டு மாத்திரம் 2,549 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதோடு, இதன்போது 2,721 பேர் உயிரிழந்தனர். இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். அதேபோல் இவ்வருடத்துக்கான தரவுகளுக்கமைய 676 வீதி விபத்துக்கள் பதிவான தோடு, அவற்றில் 706 பேர் மரணித்தனர்.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு விபத்துக்களின் எண்ணிக்கை 74 இனாலும், உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 80 ஆகவும் அதிகரித்தது. விபத்துக்களில் உயிரிழப்பவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களாக உள்ளனர். கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி வரையான தரவுகளின்படி, உயிரிழந்தவர்களில் 230 பேர் பாதசாரிகளாவதுடன், 247 பேர் மோட்டார் சைக்கிள் சாரதிகளாவர். இது நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகும்.- என்றார். (எ)

முழு நாடுமே ஒன்றாக திட்டம்:

## ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போதைப்பொருட்களுடன் கைது

கொழும்பு, ஏப். 08

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான முழு நாடுமே ஒன்றாக எனும் தேசிய திட்டத்தின் கீழ், திங்கட்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 1014 பேர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, 1021 சோதனைகள் நடத்தப்பட்டதுடன், 06 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டனர்.

இதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து 346 கிராம் ஹெரோயின், ஒரு கிலோ 503 கிராம் ஐஸ், ஒரு கிலோ 186 கிராம் கஞ்சா, 21,870 கஞ்சா செடிகள், 11 கிலோ 349 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 112 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,046 போதை மாத்திரைகள், 03 கிலோ 138 கிராம் மதனமோதகம் மற்றும் ஒரு கிலோ 354 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

## பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 604 பேர் கைது

கொழும்பு, ஏப். 08

நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 604 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 27, 004 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 25 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 228 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 149 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 163 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 56 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,188 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## 507 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றல்

கொழும்பு, ஏப். 08

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட 30 இலட்சத்து 38 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்களை இலங்கை சுங்கப் பிரிவினர் கைப்பற்றினர்.

டுபாயிலிருந்து வந்திறங்கிய சந்தேகத்துக்கிடமான கொள்கலன் ஒன்றை சோதனையிட்ட போது இந்த சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்கள் படுக்கை விரிப்புகள் என்ற பெயரில் பொதி செய்யப்பட்டிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட சிகரெட்களின் பெறுமதி சுமார் 507 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத இறக்குமதியால் அரசாங்கத்துக்கு சுமார் 460 மில்லியன் ரூபாய் வரி வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த கொள்கலன் பத்தரமுல்ல பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தின் முகவரிக்கு இறக்குமதி செய்யப்பட்டமை மேலதிக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. (எ)

## வெவ்வேறு பகுதிகளில் எரிபொருள் பதுக்கல்!

மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப். 08

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் எரிபொருட்களை பதுக்கி வைத்திருந்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதற்கமைய கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதவன் வீதி பகுதியில், அனுமதியின்றி பெருமளவிலான டீசலை பதுக்கி வைத்திருந்த நபர் ஒருவர் திங்கட்கிழமை மதியம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது 4,620 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் காரைதீவு பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கண்டி - உடுதும்பர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேதலாவ சந்தியில், அனுமதியின்றி பெற்றோலை பதுக்கி வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

திங்கட்கிழமை மதியம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, குறித்த பெண்ணிடமிருந்து 30 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் மெதமஹநுவர பகுதியைச் சேர்ந்த 47 வயது பெண் என அடையாளம் காணப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உடுதும்பர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேநேரம் கொழும்பு - நவகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல பொமீரிய பகுதியில் எரிபொருட்களை சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைத்திருந்த ஒருவர் நேற்று முன்தினம் மதியம் கைது செய்யப்பட்டார்.

இதன்போது 60 லீற்றர் டீசல், 30 லீற்றர் பெற்றோல், 40 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் கடுவலை பகுதியைச் சேர்ந்த 56 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக ஆதரவு

## 23 கடத்தல்காரர்கள் வெளிநாடுகளில் தலைமறைவு

கொழும்பு, ஏப். 08

நாட்டில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் 23 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். அத்தோடு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இந்தக் கடத்தல்காரர்கள் அனைவரும் தற்போது வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்களை கைது செய்வதற்குப் பொலிஸார் தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

அத்துடன், இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கி வந்ததாகவும், இது அனைவரும் அறிந்த விடயம் என்றும் அமைச்சர் கூறினார்.

நாங்கள் சுற்றிவளைப்புகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறோம். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அரசியல்வாதிகளே தொடர்ச்சியாக ஆதரவு வழங்கினார்கள். அது அனைவருக்கும் தெரியும். போதைப்பொருள் கடத்தலில் முதன்மையாக இருப்பது இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளே. இவர்களில் 23 பேர் அடையாளம் காணப்பட்டனர். அனைவரும் தற்போது வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். இவர்கள் குறித்து நாங்கள் விரிவாக ஆராய்ந்து வருகிறோம்- என்றார்.

கொழும்பில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழப்பு

குருநாகல், ஏப். 08

பொல்கஹவெல, பங்களாவத்தை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் நேற்று அதிகாலை மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் எஹெலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த 28 மற்றும் 35 வயதுடையவர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர்.

பயிர் நிலத்தை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த காணியின் காவலாளியாக பணியாற்றிய ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன், பொல்கஹவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

நாட்டில் சில பகுதிகளில்

# சூரியன் நேரடியாக உச்சம் கொடுக்கும்

கொழும்பு, ஏப். 08

சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வு காரணமாக, எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நாட்டில் சில பகுதிகளில் சூரியன் நேரடியாக உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சூரியன் உச்சம் கொடுக்கும் பகுதிகளில், நண்பகல் வேளையில் நிழல்கள் மிகக் குறைவாகவே காணப்படும் மற்றும் பகல் நேர வெப்பநிலை அதிகமாக இருக்கும் என்று குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

சூரியனின் இந்த வடக்கு நோக்கிய நகர்வு தொடர்வதால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்த நிலைமை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# 40 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது லொறி

## சாரதி படுகாயம்



ஹற்றன், ஏப். 08

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் லொறி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், அதன் சாரதி பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. நுவரெலியாவுக்குச் சென்று ஹற்றன் வழியாக கொழும்புக்குத் திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்தது.

லொறி சுமார் 40 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



கொழும்பு, ஏப். 08

இலங்கையின் குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு 2024 தொடர்பான இறுதி அறிக்கையை, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ். டி. கருணாரத்ன, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்தத் தொகை மதிப்பு இலங்கையின் 15 ஆவது குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பாகும். தேசிய அளவிலான தரவு சேகரிப்புக்காக முதன்முறையாக மடிக்கணினிகள் மற்றும் நவீன ரக தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டமை இதன் விசேட அம்சமாகும்.

இதன்படி 15,000 மடிக்கணினிகள் மற்றும் தொலைபேசிகளை பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதன் மூலம் தரவு சேகரிப்பை விரைவுபடுத்தவும், பிழைகளை குறைக்கவும், பெறப்பட்ட தரவுகளை நேரடியாக திணைக்களத்தின் சேர்வர் கணினிகளுக்குப் பதிவேற்றவும் முடிந்தது. அதனைத் தொடர்ந்து தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரிப்புப் பணிகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் அரச நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான தரவுச் சேகரிப்புச் செயல்பாடான இந்தத் தேசிய தொகை மதிப்பு, தொகை மதிப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. (எ)

# இந்தியாவிலிருந்து மருந்துகளை கடத்திய ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் கைது!




கொழும்பு, ஏப். 08

இந்தியாவிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கடத்தி வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்தியாவின் பெங்களூரு நகரிலிருந்து இண்டிகோ ஏர்லைன்ன் விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த நான்கு பயணிகளே இவ்வாறு சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு பகுதியைச் சேர்ந்த நால்வர் எனவும் இவர்களில் 18 முதல் 25 வயதுக்கு இடைப்பட்ட மூன்று இளைஞர்களும், 45 வயதுடைய பெண் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மருந்துப் பொருட்களை, விமான நிலையத்தின் ஊடாக கடத்திச் செல்ல முற்பட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, 08 பயணப் பொதிகளிலிருந்து சுமார் 65 கிலோ கிராம் எடையுள்ள தடுப்பூசிகள், மருந்து குளிசைகள் மற்றும் கிறீம் வகைகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த மருந்துப் பொருட்களுக்கு சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதி பெறப்படவில்லை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட மருந்து தொகுதியின் மொத்த பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் சந்தேக நபர்களை தடுப்பு காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# ஹற்றனில் நவீன சுற்றுலா பஸ் சேவை அறிமுகம்!




ஹற்றன், ஏப். 08

ஹற்றன் இ. போ. ச. சாலையை நவீன முறையில் புனரமைப்பதற்காக 6 கோடியே 67 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அபிவிருத்தி வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவில் நவீன முறையில் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் வகையில், சுற்றுலா மேற்கொள்வதற்கான பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஹற்றன் சாலை முகாமையாளர் பாலித்த தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி, கிருஷ்ணன் கலைச்செல்வி உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# "வன்முறைகளை நோக்கி தூண்டப்படும் சிறுவர்கள்"

கொழும்பு, ஏப். 08

சிறுவயதில் உடல் ரீதியான மற்றும் மன ரீதியான வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் சிறுவர்கள், வன்முறையை நோக்கித் தூண்டப்படும் போக்கு அதிகரித்துள்ளது என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் சிறுவர் மற்றும் இளம் பருவ மனநல விசேட வைத்திய நிபுணர் தர்ஷனி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவ்வாறான பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மின்சார...

அதிகரிப்பு வெறும் 15 ரூபாய் மாத்திரமேயாகும். இது ஒரு நாளைக்கு 50 சதங்கள் என்ற மிகக் குறைந்த அளவாகும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய பிரிவினருக்கு ஒரு ரூபாய் அல்லது 1.50 ரூபாய் என்ற அளவிலேயே மிகச்சிறிய கட்டண மாற்றம் அமையும்.

90 அலகுகளுக்கும் குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில், விசேட மானியத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.இதற்காக மாதந்தம் 500 கோடி ரூபாய் வீதம், அடுத்த மூன்று மாதங்களுக்கு 1,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வறண்ட காலநிலை காரணமாக மின்சாரத் துறைக்கு அடுத்த மூன்று மாதங்களில் சுமார் 32 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பாரிய சுமையை மின் நுகர்வோர் மீது மாத்திரம் சுமத்தாமல், அதனை மூன்று தரப்புகளுக்கு இடையில் பகிர்ந்து கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மொத்த நட்டத்தில் 15 பில்லியன் ரூபாயை அரசாங்கம் நேரடியாகப் பொறுப்பேற்கும். தரம் குறைந்த நிலக்கரி பயன்பாடு போன்ற தொழில்நுட்பப் பிரச்சினைகளால் ஏற்படும் 7 பில்லியன் ரூபாய் நட்டத்தை, அதற்குப் பொறுப்பான சம்பந்தப்பட்ட நிறுவனங்களே ஏற்க வேண்டும்.

மொத்த நட்டத்தில் மூன்றில் ஒரு பகுதி, அதாவது சுமார் 10 பில்லியன் ரூபாய் மாத்திரமே மின்சாரக் கட்டணத்தின் ஊடாகச் சீர் செய்யப்படும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நுகர்வோருக்குத் தடையற்ற மின்சாரத்தை வழங்குவதே அரசாங்கத்தின் இலக்காகும். அதேவேளை, நிறுவனங்களின் தவறுகளால் ஏற்படும் நட்டத்தை மக்கள் மீது சுமத்தக் கூடாது என்ற கொள்கையில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும், அதற்கான அபராதங்கள் அந்தந்த நிறுவனங்களிடமிருந்தே அறவிடப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

## அஸ்வெசும...

அதேவேளை 5000 ரூபாய் கொடுப்பனவு 7500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.இதற்கமைய, இதற்காக இந்த மாதத்தில் மேலதிகமாக 8,500 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிட்டுள்ளோம். குறித்த கொடுப்பனவு ஏப்ரல் மாதம் மாத்திரம் அதிகரிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## விவசாயிகளின்...

அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றிய போதே அவர் இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

அதன்படி, நெல்லுக்கான உர மானியம் 25,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய பயிர்ச்செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கான மானியம் 15,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பழைய விலையில் கொள்வனவு செய்யப்பட்ட பெருமளவிலான யூரியா உரக் கையிருப்பு உள்ளதாகவும், இதன் மூலம் விவசாயிகளுக்கு எவ்வித தடையுமின்றி உரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

## மருதனார்மடம்...

கட்டுக்கு அருகில் செருப்புகளும் காணப்பட்டதை அடுத்து, கிணற்றுக்குள் பார்த்தபோது சடலம் ஒன்றை அவதானித்துள்ளார்.

இதனை அடுத்து சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டவேளை சடலமாக மீட்கப்பட்டவர் மானிப்பாய் பகுதியை சேர்ந்தவர் என கண்டறிந்தனர்.

அதனை தொடர்ந்து சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## செம்மணி புதைகுழி...

கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது.

அதன் போது , மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை எதிர்வரும் 20ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கான ஏதுநிலை காணப்படவில்லை. அதனால் 27ஆம் திகதி ஆரம்பிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன், மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான பாதீட்டுக்கான அங்கீகாரம் நிதி அமைச்சினால் இது வரையில் வழங்கப்படவில்லை என்ற விடயத்தை சட்ட வைத்திய அதிகாரி மன்றில் சுட்டிக்காட்டினார்.

அதனை அடுத்து பாதீடு தொடர்பிலும் 27ஆம் திகதி அடுத்த கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியுமா என்பதனை இறுதி செய்யும் வகையிலும் எதிர்வரும் 21ஆம் திகதி திறந்த மன்றில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள திகதியிடப்பட்டது

அதேவேளை , புதைகுழியில் இருந்து வெள்ளநீர் முழுமையாக வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் தற்போது சிறிதளவான ஈரலிப்பு தன்மையே காணப்படுகிறது. 20ஆம் திகதிக்கு முன்னர் அகழ்வுப் பணிக்கு ஏற்றவாறான நிலைமை காணப்படும் என எதிர்க்கப்பார்க்கப்படுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ)

# மீனவர்களுக்கும் விசேட மானியம்!

கொழும்பு, ஏப். 08

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், அரசாங்கம் புதிய விசேட மானியத் திட்டங்களை அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை ஆற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கடற்றொழிலாளர்களுக்கான பிரத்யேக சலுகைகள் குறித்து விரிவான விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சாதாரண இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளைப் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கு , தற்போது நடைமுறையில் உள்ள 100 ரூபா பொதுவான மானியத்துடன் மேலதிகமாக 50 ரூபா வழங்கப்படவுள்ளது.

ஒரு லீற்றர் எரிபொருளுக்கு (பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய்) மொத்தம் 150 ரூபாய் மானியம் கிடைக்கும்.

ஒரு நாளைக்கு 25 லீற்றர் வீதம், மாதம் 25 நாள்களுக்கு கணக்கிடப்பட்டு, மாதத்திற்கு 31,250 ரூபாய் நேரடியாக கடற்றொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும்.

இந்த விசேட கொடுப்பனவு அடுத்த மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்படும்.

ஆழ்கடல் கடற்றொழிலில் ஈடுபடும் பல நாள் படகுகளுக்கு ஒரு பயணத்திற்கு தலா 150,000 ரூபா எரிபொருள் கொடுப்பனவாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுவாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கடலுக்குச் செல்லும் இந்த கடற்றொழிலாளர்களின் எரிபொருள் செலவைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்-என்றார். (அ)

# சொந்த நிலத்தில் அநாதைகளாகும் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள்!

### சபையில் சுட்டிக்காட்டினார் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, ஏப். 08

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சொந்த நிலத்திலேயே அநாதைகளாக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இன்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் மக்கள் இன்றும் தங்களது சொந்த நிலங்களை இழந்து தெருக்களில் நிற்கிறார்கள்.

உறவினர்களின் வீடுகளிலும், நண்பர்களின் காணிகளிலும் தஞ்சம் புகுந்துள்ள இம்மக்களின் துயரம் சொல்லிலடங்காததாகவுள்ளது. ஆனால், அவர்களின் கண்ணீரை துடைக்கவேண்டிய அரசாங்கம், நில அளவைத் திணைக்களத்தை அனுப்பி இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் மக்களின் நிலங்களை அளக்க முற்படுவது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

"கடந்த அரசாங்கங்கள் தான் இதைச் செய்தது என்றால், உங்கள் அரசால் ஏன் 30 ஏக்கர் காணிகளை விடுவிக்க முடியவில்லை? கர்ம வினைகள் உங்களை ஒருபோதும் உருப்படவிடாது. சொந்த நிலத்தை உங்கள் கண் முன்னாலேயே அளந்து பறிக்கும்போது அந்த உரிமையாளரின் மனநிலை என்னவாக இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்-என்றார். (அ)

## செம்மணி மனித...

அல்லது மாலை 02.30 மணிக்கு பின்னராக புதைகுழி காணப்படும் பகுதிக்கு சென்று நேரில் பார்வையிட முடியும் என அனுமதித்துள்ள மன்று, இரண்டு நேரங்களில் எந்த நேரத்தில் செல்லவுள்ளனர் என்பதனை முன்னரே மன்றுக்கு அறிவிக்கவேண்டும் என மன்று அறிவுறுத்தியுள்ளது. (அ)

## ஏப்ரல் மாத...

தொடர்பாக அரசியல் ரீதியான அனைத்து பேச்சுவார்த்தைகளும் நிறைவடைந்துள்ளதுடன் இரண்டு நாடுகளுக்கும் இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏப்ரல் மாத நடுப்பகுதியிலிருந்து ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு எண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி சார்ந்த இறுதிக்கட்ட விவரங்கள் தற்போது இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத் தடைகளுக்குத் தீர்வாக, இந்த ஒப்பந்தம் முக்கியமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## எதிர்வரும்...

நெருக்கடி குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றில் நேற்று விசேட உரையாற்றியிருந்தார்.

இதன்போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஒவ்வொரு டீசல் லீற்றருக்கும் 100 ரூபாய் நிவாரணமும் பெற்றோல் லீற்றர் ஒன்றுக்காக 20 ரூபாய் நிவாரணமும் வழங்கப்படவுள்ளன.

இதற்காக மாதம் ஒன்றுக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 3 மாதங்களுக்கு 600 கோடி ரூபாய் செலவிடப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ)

## பன்றித்தலைச்சி...

கூட்ட நெரிசலில் பெண்ணொருவரின் தாலிக்கொடி களவாடப்பட்டிருந்தது.

அது தொடர்பில் குறித்த பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமெராக்களின் பதிவுகளை சோதனை செய்து தாலிக்கொடி அறுத்த 58 வயதான பெண்ணை பொலிஸார் அடையாளம் கண்டு, அவர் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த பெண் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் ஆலயத்துக்கு காரில் வருகை தந்த நிலையில் அவரை பொலிஸார் அடையாளம் கண்டு கைது செய்தனர்.

இதன்போது அவருடன் காரில் வந்த ஏனைய இருவரையும் கைது செய்ததுடன் காரையும் மீட்டு , பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் களவாடிய தாலிக்கொடியை தான் கிளிநொச்சிப் பகுதியில் உள்ள தாம் வழிபாட்டுக்கு செல்லும் ஆலயம் ஒன்றின் பிள்ளையார் சிலைக்கு பின்புறமாக மறைத்து வைத்திருப்பதாக வாக்குமூலம் அளித்திருந்தார்.

அதன் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தாலிக்கொடியை மீட்டு வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூவரிடமும் பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

ஈழநாடு
Eelanadu

# சிறுவர்களுக்கு உடல் ரீதியான தண்டனை வழங்கினால் சிறை!

## தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தம்

கொழும்பு, ஏப். 08

"சிறுவர்கள் தொடர்பான உடல் ரீதியான தண்டனை" எனும் புதிய ஏற்பாடு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் தண்டனை என்ற பெயரில் சிறுவர்களுக்கு வலியை ஏற்படுத்துவது அல்லது அவர்களை அவமானப்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்படும். இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது 10,000 ரூபா அபராதம் அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படலாம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமைகள் மற்றும் உடல் ரீதியான தண்டனைகள் தொடர்பாக இவ்வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை 11,409 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கூறியுள்ளது.

மொத்தம் 10,455 முறைப்பாடுகள் பதிவாகின. இதில் 2,099 முறைப்பாடுகள் சிறுவர்களுக்கு எதிரான கொடூரமான நடத்தைகள் தொடர்பானவை.

2026 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலேயே முறைப்பாடுகளின் எண்ணிக்கை 11,000 ஐ கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கு எதிரான உடல் ரீதியான தண்டனைகளைத் தடுக்கும் நோக்கில் தண்டனைச் சட்டக் கோவையில் பின்வரும் மாற்றங்களைச் செய்ய அதிகாரசபை பரிந்துரைத்துள்ளது.

"சிறுவர்கள் தொடர்பான உடல் ரீதியான தண்டனை" எனும் புதிய ஏற்பாடு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் தண்டனை என்ற பெயரில் சிறுவர்களுக்கு வலியை ஏற்படுத்துவது அல்லது அவர்களை அவமானப்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்படும்.

இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது 10,000 ரூபா அபராதம் அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படலாம்.

காயம் ஏற்படுத்துவது தொடர்பான தண்டனைச் சட்டத்தின் 314 மற்றும் 316 ஆம் பிரிவுகளில் திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் சட்டத்துறை தலைவர் பிரதீகா சகலசூரிய மேலும் குறிப்பிட்டார்.

மேலும் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில், குறிப்பாகக் கடுமையான காயம் ஏற்பட்டால், தண்டனைகள் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையிலிருந்து 10 ஆண்டுகள் வரை அதிகரிக்கப்படலாம் எனவும் குறிப்பிட்டார்.

சட்டக்கோவையின் 308 ஏ பிரிவில் "விருப்பத்துடன்" என்ற சொல்லுக்குப் பதிலாக "திட்டமிட்டு" என்ற சொல் சேர்க்கப்படவுள்ளது. இதன் மூலம் குற்றவாளிகள் தப்பிப்பதற்கான ஓட்டைகள் அடைக்கப்படும்.

சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது உடல் ரீதியான தண்டனைகள் குறித்து பொதுமக்கள் எந்நேரமும் 1929 என்ற கட்டணமில்லா தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை வழங்க முடியும் என அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் தகவல் பணிப்பாளர் ஷனிகா மலல்கொட கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ)

## எரிபொருள் விலை உயர்வை சமாளிக்க அரசு லீற்றருக்கு 100 ரூபாய் நிவாரணம்!

### அமைச்சர் குமார ஜயக்கொடி தகவல்

கொழும்பு, ஏப். 08

உலகச் சந்தையில் நிலவும் போர்ச் சூழலால் எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளபோதிலும், நாட்டு மக்களுக்கு சுமை ஏற்படாத வகையில் அரசாங்கம் பாரிய நட்டத்தைத் தாங்கிக்கொண்டு நிவாரணம் வழங்கி வருவதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

சபையில் நேற்று எதிர்க்கட்சித்தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாத எரிபொருள் விலை திருத்தத்தின் போது, ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாயையும், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாயையும் அரசாங்கமே நட்டமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இதன் மூலம் உலகச் சந்தை விலை உயர்விலிருந்து சாமானிய மக்கள் பாதுகாக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிவாரணம் எப்போது வழங்கப்படும் எனக் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினருக்குப் பதிலளித்த அமைச்சர், "884 பில்லியன் ரூபாயைக் கடனாக வைத்துவிட்டுச் சென்றவர்கள்தான் இன்று நிவாரணம் பற்றிப் பேசுகிறார்கள்" எனச் சாடினார்.

மேலும், அரசாங்கத்தின் முறையான முகாமைத்துவத்தினால் மட்டுமே தற்போது எரிபொருள் தட்டுப்பாடு இன்றி விநியோகிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

## திடீர் மின் விநியோகத் தடை; சபையில் அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஏப். 08

இலங்கையில் தற்போது திட்டமிட்ட மின்வெட்டு எதுவும் அமுல்படுத்தப்படவில்லை. மின்சார விநியோகக் கட்டமைப்பில் ஏற்படும் திடீர் தொழில்நுட்பக் கோளாறுகளே அவ்வப்போது ஏற்படும் மின் துண்டிப்புகளுக்குக் காரணமாகும் என எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் அண்மைக் காலமாக இரண்டு மணித்தியாலங்கள் வரை திடீர் மின்வெட்டு ஏற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சபையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதன்போது, மக்களிடம் அறிவிக்காமல் இவ்வாறு மின்வெட்டை மேற் கொள்வது ஏன் என அவர் வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் குமார ஜயக்கொடி,

"தற்போது நிலவும் மின் துண்டிப்புகள் திட்டமிட்டவை அல்ல. மின் விநியோகக் கட்டமைப்பில் அவ்வப்போது ஏற்படும் சில இடையூறுகள் புதிய விடயமல்ல.

மின்சாரக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்படும் மின் துண்டிப்புகளை உடனடியாகச் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவை திடீர் செயலிழப்புகளே தவிர, திட்டமிட்ட மின்வெட்டு அல்ல.

அரசாங்கம் திட்டமிட்ட மின்வெட்டைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால், அது குறித்த அறிவித்தல் முன்கூட்டியே பொது மக்களுக்கு வழங்கப்படும்.

தற்போதைய நிலையில் அவ்வாறான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சியினர் மக்களைத் தவறாக வழிநடத்தும் நோக்கில் இவ்வாறான கேள்விகளை எழுப்புகின்றனர் -என்றார்.

(அ)

## விலையேற்றத்தால் நெருக்கடியில் மக்கள் புத்தாண்டுக்கு முன் நிவாரணம் வழங்குக!

### சபையில் எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு, ஏப். 08

"அரிசி, சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் பாரிய நெருக்கடியைச் சந்தித்துள்ளனர். எனவே, தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அரசாங்கம் மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்க வேண்டும்" என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக வலியுறுத்தினார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று நாடாளுமன்றம் கூடியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் நாள்களில் தமிழ்-சிங்களப் புத்தாண்டு கொண்டாடப்படவுள்ளது. இவ்வாறான பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. இதன் காரணமாக நாட்டு மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமல் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர்.

குறிப்பாக அரிசி, சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான விலைகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளன. இவ்வாறான சூழலில் அரசாங்கம் மௌனம் காக்கக் கூடாது. நாட்டு மக்களின் பக்கம் நின்று சிந்தித்து, அவர்களுக்குத் தேவையான உடனடி நிவாரணங்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கும், மக்களுக்குச் சலுகை விலையில் பொருள்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் விசேட வேலைத்திட்டமொன்றை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் - என்றார்.

(அ)

## 1 லீற்றர் எரிபொருளில் 165 ரூபாய் வரி அறவீடு!

### ஆனந்த பாலித சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 08

சுத்திகரிப்பு நிலையத்தை மூடி விட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்கள் மக்களைச் சுரண்ட அரசாங்கம் இடமளித்துள்ளது. முந்தைய அரசாங்கத்தின் விலைச் சூத்திரத்தை விமர்சித்தவர்கள், தற்போது அதைவிட மோசமான மறைமுக சுரண்டலை மேற்கொள் வதாகவும், ஒரு லீற்றர் எரிபொரு ளில் சுமார் 165 ரூபாய் வரி அறவிடப்படுவதாகவும் ஐக்கிய இணைந்த தொழிற்சங்க முன்னணியின் ஒருங் கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தற் போதைய அரசாங்கத்தின் எரிசக்தி முகாமைத்துவம் மற்றும் விலை அதிகரிப்புகளைக் கடுமையாக விமர்சித்தார்.

லாப்ஸ் மற்றும் லிட்ரோ நிறு வனங்கள் ஒரு சிலிண்டரில் 1300 முதல் 1700 ரூபாய் வரை அதிகலாபம் ஈட்ட அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும், பழைய கையிருப்புகளை வைத்துக் கொண்டு மூன்று முறை விலை அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நாளொன்றுக்கு 6600 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட சுத் திகரிப்பு நிலையத்தை மூடிவிட்டு, ஐ.ஓ.சி உள்ளிட்ட வெளி நாட்டு நிறுவனங்கள் 20 வீதம் லாபம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

"அமைப்பை கட்டுப்படுத்துதல்" என்ற பெயரில் நீர்கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று முதல் ஒன்றரை மணி நேர மின் வெட்டு ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.